1987 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். டிட்கோவிடம் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது. 5 சர்க்கரை ஆலைகள் இருந்தால் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க முடியும். அந்த அடிப் படையில் இப்போது புகளூரில் அமைக்கப்பட்டு, நல்லமுறையில் நடந்து வருகிறது.

சென்னையில் நடமாடும் நீதிமன்றங்கள்.

352—(* வினா எண். 6158) **திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் குடிமையியல் வழக்குகளை (Civil Offences) விசாரிக்க இரு நடமாடும் நீதிமன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப் பெறும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஆம். இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: தலைவரவர்களே, இன்றைக்கு சிடி சிவில் கோர்ட் ஒரே இடத்தில் இருப்பதால் இட நெருக்கடி ஏற்பட்டு, மக்களுடைய போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது, வழக்குகள்கூட ஒருசில சீனியர் வழக்கறிஞர்களிடம் குவிந்து இருக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே ஈஸ்ட், வெஸ்ட், நார்த் சௌத் சென்ட்ரல் என்று பிரித்து அந்தந்தப் பகுதிகளில் நீதிமன்றங்களை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, உயர்நீதிமன்றத்தோடு கலந்து இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்க ஏற்கெனவே அரசு பரிசீலனை செய்துவருகிறது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவரவர்களே, Prohibition Offenders கேசை விசாரிப்பதற்கு என்று 3, 4 தாலுகாக் களுக்கு ஒரு கோர்ட் இருக்கிறது. இந்த நிலையை மாற்றி அந்த அந்த தாலுகாவிலே ஒரு நீதிமன்றம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, எந்த எந்த மாவட்டத்தில் மதுவிலக்குக் குற்றங்கள் எந்த எந்தப் பகுதியில் அதிகமாக இருக்கின்றன என்ற தகவல் கேட்கப் பட்டிருக்கிறது. அந்தத் தகவல் வந்தவுடன் குற்றங்கள் அதிக மாக இருக்கின்ற பகுதிகளில் தனி நீதி மன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

வழக்குரைஞர்களுக்கு இயக்ககம் அமைத்தல்.

353—(* வினா எண். 8670) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வழக்கு நடத்துநர்கள் இயக்ககம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வழக்கு நடத்துநர்கள் இயக்ககம் அமைப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த இயக்ககத்தின் அமைப்புப் பணிகளை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள தனி அலுவலர் இது சம்பந்தமான பணி களைக் கவனித்து வருகின்றார்.

திருமதி பா. வளர்மதி: தலைவரவர்களே, இந்த இயக்ககம் தமிழ் நாட்டில் எந்த எந்த மாவட்டங்களில் செயல்பட யிருக்கிறது? அரசுத் தரப்பில் போடப்படுகின்ற வழக்குகள் பெரும்பாலும் வெற்றி பெறுவதில்லை. ஆகவே, அரசு வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஒரு குழு அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.